## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) திரு. எஸ். வெங்கிடரமணன், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இரங்கல் தீர்மானங்கள். இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் திரு. எஸ். வெங்கிடரமணன் அவர்கள் 18–11–2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*திரு. எஸ். வெங்கிடரமணன் அவர்கள் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராகவும், 1985–1989 ஆம் ஆண்டுகளில் ஒன்றிய அரசின் நிதித் துறைச் செயலாளராகவும் திறம்படப் பணியாற்றியவர்.*

*அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.*

### (ஆ) மருத்துவர் எஸ்.எஸ். பத்ரிநாத், புகழ்பெற்ற கண் மருத்துவர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *புகழ்பெற்ற கண் மருத்துவரும், சங்கர நேத்ராலயா மருத்துவமனை நிறுவனருமான மருத்துவர் எஸ். எஸ். பத்ரிநாத் அவர்கள் 21–11–2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*முற்பகல் 10–05*

*குறைந்த செலவில் கண் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் சங்கர நேத்ராலயா மருத்துவமனையைத் தொடங்கிய மருத்துவர் எஸ்.எஸ். பத்ரிநாத் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண் சிகிச்சை பெற வித்திட்டவர். இத்தகைய மகத்தான சேவைக்காக பத்ம ஸ்ரீ மற்றும் பத்ம பூஷண் போன்ற உயரிய விருதுகள் பெற்ற பெருமைக்குரியவர்.*

*அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.*